[1975 ஏப்ரல் 21

Scheme for the Physically Handicapped Persons.

* 264 *Q.*—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the number of physically handicapped persons in Tamil Nadu benefited by the Scheme for the Physically Handicapped Persons?

உடல் ஊனமுற்றோர் திட்டம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

தமிழ்நாட்டில் உள்ள உடல் ஊனமுற்றோர்களில், உடல் ஊனமுற்றோர் திட்டத்தின் அடிப்படையில் எத்தனை பேர் பயன் பெற்றுள்ளனர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சுமார் 22,000 பேர் பயன் பெறுவர்.

திரு வே. தங்கப்பாண்டியன் : இந்த உடல் ஊனமுற்றவர்களில் படித்தவர்களாக இருந்து வேலை வாய்ப்புக்கு மனுச் செய்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் ; அப்படி வேலை வாய்ப்புக்கு மனுச் செய்தவர்கள் எத்தனை பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கின்றது? தமிழ்நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில், டிஸ்ட்ரிக்ட் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ்களில், இந்த உடல் ஊனமுற்றோர்களுக்கு முன் உரிமை தந்து அந்த வேலை வாய்ப்புகளை அளிப்பதற்கு உத்தரவு இருக்கின்றதா? அப்படி உத்தரவிட்டிருந்தால் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கின்றது என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. வி. எம். அண்ணாமலை : அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலே முன் உரிமை அளிக்கப்படுகிறது என்பதை முதலிலே தெரிவித்துக் கொண்டு, உடல் ஊனமுற்றோர் மறு வாழ்வுத் திட்டத்தில் தொழிற் பயிற்சி அளிக்கவும் அவர்களுக்குரிய வேலைவாய்ப்புத் திட்டங்களும் இருக்கின்றன. உடல் ஊனமுற்ற இளைஞர்களுக்கு போக்கு வரத்துத் துறை, தமிழக அரசு சிறுதொழில் நிறுவனம், அரசு அச்சகம், கைத்தறி, விசைத்தறித் தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் கழகம், விவர அட்டை சோதித்துப் பார்த்தல் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதன் படி பயன் பெறுவோர்கள் விவரமும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த ஆணையின் படி, பல்லவன் போக்குவரத்துத் துறை மூலம் 200 பேர் பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, முதல் கட்டத்திலே 100 பேர் பயிற்சி பெற்று வருகின்றார்கள். அது போலவே இந்த அரசு போக்கு வரத்துத் துறையில் 100 பேர்களுக்குப் பயிற்சி

அளிக்கப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 50 பேர்கள் இப்போது பயிற்சி பெற்று வருகின்றார்கள். சேரன் போக்குவரத்துக் கழகத்திலே 10 பேர், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் 20 பேர், டான்சி நிறுவனத்தில் 100 பேர், கைத்தறித் துறையில் 200 பேர், அரசு அச்சகத்தில் 50 பேர், கதர் கிராமக் கைத்தொழிலில் 600 பேர், மொத்தம் 1280 பேர்களுக்கு முதற்கட்டமாக தற்போது வேலைவாய்ப்பு பெறுவதற்குரிய வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சற்றேறக்குறைய 1005 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் பயன் பெற எவ்வகையானவர் உடல் ஊனமுற்றவர்களாகக் கருதப் படுகிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு இருக்கின்ற தகுதிகள் என்ன என்பது பற்றி ஆய்வு செய்வதற்கு என்று மாநில அளவில் ஒரு குழு போடப்பட்டிருக்கின்றது. அந்தக் குழு உடல் ஊனமுற்றவர்களுக்கு அடிப்படைத் தகுதிகள் என்ன இருக்க வேண்டும் என்று ஆராய்கின்றது. தங்களுடைய சொந்த முயற்சிகளினால் பணி செய்து, பணிக் கூடங்களுக்குச் சென்று பயிற்சி பெற முடியாதவர்கள், படித்து அதே நேரத்தில் கைகள் நல்ல வகையிலே இயங்காத வகையிலே இருந்து, நடப்பதற்கு முடியாமல் இருந்தால், அவர்களுக்குத் தட்டெழுத்து பயிற்சி, அது போலவே நடப்பதற்கு முடியாதவர்களுக்கு எழுதுகின்ற, ஓவியங்கள், சித்திரங்கள் வரைதல் போன்ற பயிற்சிகள் அளிப்பது—இவ்வாறு குழு தனித்தனியாக அந்தந்த கருத்துகளுக்கு ஏற்ப, அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப, செயல்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல்வர் அவர்களின் "நெஞ்சுக்குநீதி" என்ற வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை கண்ணொளி இழந்தவர் ஒருவர் தலைமையில், தொழு நோய் இல்லத்தைச் சேர்ந்த ஒருவர் வெளியிட்டு இந்த உடல் ஊனமுற்றோர் ஒருவர் பெறுவதாக அண்மையில் ஒரு விழா பத்திரிகையைப் பார்த்தேன். அதற்கு ஏதாவது காரணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி.எம்.அண்ணாமலை: தலைவரவர்களே, அந்த விழாவினை ஏற்பாடு செய்திருப்பவர்கள்தான் காரணம் கூறமுடியும் என்று நான் கருதுகிறேன். இந்த நாட்டில் சமுதாயத்தில் ஏற்றமுறாத தன்மையிலே சமுதாய மக்களால் விடப்பட்ட தன்மையிலே, நீண்ட நெடுங் காலமாகவே மனம் புண்ணாகிப் போய் தாழ்ந்த நிலையிலே இருக்கின்ற தொழு நோய்க்காரர்களும் முடவர்களும் கண் பார்வை இழந்தவர்களும் இன்றைய தினம் பல தொல்லைகள் பட்டு வருகின்றார்கள். அவர்கள் தொல்லைகள் நீங்குவதற்கு அவர்களுடைய துன்பத்தைப் போக்குவதற்கு, கை கொடுத்து கரை ஏற்றுவதற்கு ஒரு புண்ணியவான் இருக்கின்றார்களே, அவரது பொற்பாதத்தை, அவரது பொற்கமலங்களைப்

போற்றித் தொழ வேண்டும் என்பதற்காக, அந்த "நெஞ்சுக்கு நீதி" என்கின்ற வரலாற்றுப் புத்தகத்தை வெளியிடுகின்ற குழுவினர்கள் அவர்களாகவே அந்த ஊனமுற்றவர்கள் எந்த வகையிலே போற்றுகின்றார்கள், எண்ணுகின்றார்கள், வாழ்த்துகின்றார்கள் என்பதை தமிழகமாகவது உணரட்டும், நல்லவர்கள் இருந்தும் பலபேர் வாழ்த்துவதிலே கஞ்சத்தனம் காட்டுகின்றார்களே அந்தக் கஞ்சத்தனத்தை, அப்படி இல்லாத தன்மையிலே மாற்றிக் கொள்ளட்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அருமையான சொற்பொழிவு ஆற்றினார்கள்.

திரு. க. அறிவழகன்: இந்த உடல் ஊனமுற்றவர்கள் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் மனம் ஊனம் உற்றோரைச் சேர்த்துக் கொள்கின்ற ஒரு திட்டம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். **Mentally Retarded People**-ஐச் சேர்த்துக் கொள்கின்றார்களா?

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை: மூளை வளர்ச்சி அற்றவர்கள் இங்கே இந்தத்திட்டத்தின் மூலம் பலன் பெறுவதற்கும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. சி. வி. ராஜகோபால்: "நெஞ்சுக்கு நீதி" புத்தகத்தில் நல்ல கருத்துக்கள் இருக்கின்றன. உண்மையில்லை என்று சொல்லவில்லை. ஆனால் "நெஞ்சுக்கு நீதி" என்னும்போது, எல்லோருக்கும் நெஞ்சு இருக்கின்றது. இது சம்பந்தப்பட்டு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் நெஞ்சம் இருக்கின்றது, ஏதாவது கருத்தில் உடல் ஊனம் உற்றவர்களுக்கு அவர்கள் எழுத முடியுமா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை: தலைவரவர்களே, இன்றும் எழுதுகிறேன், என்றும் எழுதுவேன், எங்கும் எழுதிக்கொண்டேதான் இருக்கிறேன் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

Untouchability (*Offences*) *Act*, 1955.

*** 265 *Q.*—Thavathiru KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the number of cases filed during 1974, under the Untouchability (Offences) Act, 1955?**

1955-ஆம் ஆண்டு தீண்டாமை விலக்குச் சட்டம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

1955ஆம் ஆண்டு தீண்டாமை விலக்குச் சட்டத்தின் கீழ் **1974ஆம்** ஆண்டு தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?